செ.கு. எண் : 177

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 9.11.2011

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், **பிளவுக்கல் அணைத்திட்ட நீர்த்தேக்கத்திலிருந்து** பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பிரதான கால்வாய் மூலம் **10.11.2011 முதல் 120 நாட்களுக்கு** தேவைக்கேற்றாற்போல் இடைவெளி விட்டு தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், பிளவுக்கல் அணைத்திட்டத்தின் கீழ் உள்ள **7,218 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9